# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்),**
**தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590**

**<u>ஆணை நாள்: 05.09.2019 (பிற்பகல்)</u>**
**<u>முன்னிலை</u>**

**திரு. ச.த. தமிழ்குமார், B.A., B.L.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

## <u>வழக்கு எண். SA 4504/F/2019</u>

திரு. R. வினோத் … மேல்முறையீட்டாளர்

**எதிர்**

**பொதுத் தகவல் அலுவலர்.**
**அரசு விரைவு போக்குவரத்துக் கழகம்,**
**பல்லவன் சாலை,**
**சென்னை – 600 002.** … பொது அதிகார அமைப்பு

பார்வை :

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 19.03.2019 |
| முதல் மேல்முறையீட்டு நாள் – பிரிவு 19(1) | 29.04.2019 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு – பிரிவு 19(3) | 15.05.2019 |

******

## <u>ஆணை</u>

**இவ்வாணையத்தில் இன்று (05.09.2019) நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு. R. வினோத், சென்னை ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு. J. சம்பத், துணை மேலாளர் (சட்டம்) அவர்கள் அவசர பணி நிமித்தம் காரணமாக விசாரணைக்கு ஆஜராகாத நிலையில், அவர் சார்பாக திரு. T.S. லெட்சுமி நாராயணன், பொதுத் தகவல் அலுவலர் மற்றும் துணை மேலாளர் (MCOP), அரசு விரைவு போக்குவரத்துக் கழகம், பல்லவன் சாலை, சென்னை அவர்களும் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரானார்கள்.**

**2.** மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 19.03.2019 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், தமிழ்நாடு அரசு சார்பில் வழங்கப்படும் மாவட்ட அளவிலான மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் இலவச பேருந்து அனுமதி சீட்டு பஸ் பாஸ் எந்தந்த வகை மாற்றுத் திறனாளிகளுக்கு மற்றும் எவ்வகை திட்டத்தின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன என்பதற்கான அரசாணை பதிவு மற்றும் தகவல் தொடர்பு குறித்த தகவல் கோரியும், மேற்சொன்ன பேருந்துகளில் வழங்கப்படும் 75% பயணச் சலுகை குறித்த அரசாணை

பதிவு விவரம் மற்றும் எவ்வகை பேருந்துகளில் அவர்கள் பயணம் செய்யலாம் என்பதற்கான தகவல் கோரியும், உள்ளூர் மற்றும் வெளியூர் சீரமைப்பி (A/C) பேருந்துகளில் எத்தனை இட ஒதுக்கீடு மற்றும் அவ் ஒதுக்கீடு நடத்துனர் மூலம் கிடைக்காத பட்சத்தில் யாரிடம் முழுவிவரங்களை அறிய புகார் அளிக்க வேண்டும் என்பதற்கான வழிமுறைகள் குறித்த தகவல் கோரியும், மேற்சொன்ன நபர்களுக்கு எவ்வகையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்பது குறித்த தகவல், கோரியும், மேற்சொன்ன மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் பேருந்து பயணச் சலுகைகளில் தமிழ்நாடு எல்லை வரை மூன்றில் ஒரு பங்கு பயணச் சலுகை என அறிவித்துவிட்டு முதல் திருப்பதிக்கு கடந்த பின்னர் முழு பயணத்தொகை வசூலிப்பதற்காக விவரம், எவ்வகை அரசாணையின் கீழ் இத்தொகை வசூலிக்கப்படுகிறது என்பதற்கான தகவல் கோரியும், கடந்த இரண்டு ஆண்டு கணக்கெடுப்பின்படி மாற்றுத்திறனாளிகளுக்கு எத்தனை இலவச மாவட்ட பேருந்து அட்டை வழங்கப்பட்டது மற்றும் 75% பேருந்து சலுகைகள் அதிக பார்வை குறைபாடு (VH)/ மனவளர்ச்சி குறைபாடு (MR) மற்றும் கால் பாதிப்பு (OH) ஆகியவற்றிற்கு தனித்தனியாக முழு விவரங்கள் மற்றும் இச்சலுகையின் மதிப்பு தொகையின் விவரம், அவற்றுக்கான தகவல் கோரியும் மாற்றுத்திறனாளிகளுக்கான முன் பதிவு குறித்த தகவல் அவர்களுக்கு ஏதேனும் சிறப்பு முன்பதிவு ஒதுக்கப்பட்டுள்ளதா? அவ்வாறிருப்பின் ஒருவேளை மாற்றுத்திறனாளிகள் பயணம் செய்யாத பட்சத்தில் அவ்விடத்தை குறிப்பிட்ட நேரத்தில் பிறருக்கு வழங்குவது குறித்த தகவல் கோரியும், வருடத்திற்கு ஒருமுறை மாற்றுத்திறனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் நெடுந்தூர பயணச் சலுகை பெறுவது குறித்த தொகைகள் மற்றும் அதுபற்றி தெரிந்துகொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலகம் பற்றிய முழுமையான தகவல் கோரியும் மற்றும் அவர்கள் மாவட்ட இலவச பேருந்து சலுகை திட்டத்தில் எவ்வகை பேருந்தில் பயணம் செய்வது என்பது குறித்த முழுதகவல் போன்ற மாற்றுத் திறனாளிகள் குறித்து பயணச் சலுகை போன்ற பல்வேறு தகவல்களை கேட்டு பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சென்னை அவர்களுக்கு மனு ஒன்றை விண்ணப்பித்துள்ளார்.

**3.** மேல்முறையீட்டாளரின் மனு **28.03.2019** தேதியிட்டு**,** பிரிவு **6(3)**ன்படி உரிய பொதுத் தகவல் அலுவலரான பொதுத் தகவல் அலுவலர், அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட், சென்னை மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் – விழுப்புரம்/ சேலம்/கும்பகோணம்/மதுரை/கோயம்புத்தூர்/திருநெல்வேலி அவர்களுக்கு தகவல் வழங்கும் பொருட்டு மாறுதல் செய்யப்பட்டுள்ளது**.** பொதுத் தகவல் அலுவலர் **16.04.2019** தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார்**.** திருப்தியளிக்காத நிலையில்**,** தான் கோரிய தகவல்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு கேட்டு**, 29.04.2019** தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு **19(1)**ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார்**.** முதல் மேல்முறையீட்டு அலுவலர் **02.05.2019** தேதியிட்டு மேல்முறையீட்டாளருக்குத் தகவல் வழங்கியுள்ளார்**.** மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவல்களை பெற்றுத்தருமாறு கேட்டு**, 15.05.2019** தேதியிட்டு**,** பிரிவு **19(3)**ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார்**.** அம்மனு மீது இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது**.**

**4.** இன்றைய விசாரணை**க்கு** மேல்முறையீட்டாளர் ஆஜராகாத நிலையில்**,** தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவில்**,** தான் கோரிய தகவல்களுக்கு உரிய விசாரணை நடத்தி தான் கோரிய தகவல்களைப் பெற்றுத் தருமாறு ஆணையத்திடம் கோரியுள்ளார்**.**

**5.** இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் தொடர்பாக **16.04.2019** மற்றும் **02.05.2019** தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்களுக்கு உரிய பதில் அளித்துள்ளதாகவும், திருப்தியளிக்காத நிலையில் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்தார்**. மேலும், அவர் கோரிய தகவல்களுக்கு உரிய விரிவான பதிலினை மேல்முறையீட்டாளருக்கு அளிப்பதற்காக கொண்டுவந்திருப்பதாக தெரிவித்து அதற்குரிய ஆவணங்களை ஆணையதின் முன்பு சமர்ப்பித்தார்.**

**6. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் அளித்த ஆவணங்களை ஆணையம் பரிசீலனை செய்ததில், மேல்முறையீட்டாளர் தனது தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவில் கோரிய தகவல்கள் தொடர்பாக பொதுத் தகவல் அலு**வலர் அவர்களால் 16**.04.2019** மற்றும் **02.05.2019** தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக பதில் அளித்துள்ளதாகவும், **அளித்துள்ளதாகவும், மேலும், அது தொடர்பான விரிவான பதிலினை மேல்முறையீட்டாளருக்கு அளிப்பதற்காக கொண்டுவந்திருப்பதாக தெரிவித்தார். ஆனால் இன்றைய விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் ஆஜராகாத நிலையில், அது தொடர்பான**

விரிவான அறிக்கையினை அளிக்குமாறு இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டு கீழ்க்கண்ட உத்தரவினை ஆணையம் பிறப்பிக்கின்றது :-

" மேல்முறையீட்டாளர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ன்படி தாக்கல் செய்துள்ள மனுவில் கோரிய தகவல்கள் தொடர்பாக பொதுத் தகவல் அலுவலர் இருக்கின்ற ஆவணங்களின் அடிப்படையில் விரிவான அறிக்கை ஒன்றினை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 7 நாட்களுக்குள் தகவல் அறியும் உரிமைச் சட்டப் பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி உரிய சான்றொப்பமிட்டு மேல்முறையீட்டாளருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, அதனை மேல்முறையீட்டாளர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இணைத்து, ஆணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கப்படுகிறது.

(ஒம்/-) (ச.த. தமிழ்குமார்)
மாநிலத் தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண்.SA 4504/F/2019</u>
<u>பொது அதிகார அமைப்பு</u>

பெறுநர்

பொதுத் தகவல் அலுவலர்.
அரசு விரைவு போக்குவரத்துக் கழகம்,
பல்லவன் சாலை,
சென்னை – 600 002.

<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>

திரு. R. வினோத்,
எண்.1/1, முத்து கிருஷ்ணன் தெரு,
பாண்டிபஜார்,
சென்னை - 600 017.

Copy to: Judgement File / Spare
NA/Sr.PS/17.9.2019